# ஐந்திணை ஐம்பது

##1
மல்லர்-க்-கடந்தான்-நிறம்-போன்று இருண்டு எழுந்து
செல்வ-க்-கடம்பு-அமர்ந்தான் வேல் மின்னி நல்லாய்
இயங்கு எயில் எய்துவன் தார் பூப்ப ஈதோ
மயங்கி வலன்-ஏரும்-கார்

##2
அணி-நிற-மஞ்ஞை அகவ இரங்கி
மணி-நிற மா-மலை-மேல் தாழ்ந்து பணிமொழி
கார்-நீர்மை கொண்ட கலி-வானம் காண்-தொறும்
பீர்-நீர்மை கொண்டன தோள்

##3
மின்-உம் முழக்கு-உம் இடி-உம் மற்று இன்ன-
கொலை-ப்-படை சால-ப்-பரப்பிய முல்லை
முகை வென்ற பல்லினய் இல்லையோ-மற்று
நமர் சென்ற நாட்டுள் இ-க்-கார்

##4
உள்ளார்-கொல் காதலர் ஒண்டொடி நம்-திறம்
வள்-வார்-முரசு-இன் குரல்-போல் இடித்து உரறி
நல்லார் மனம் கவர த் தோன்றி பணிமொழி-ஐ க்
கொல்வாங்கு க் கூர்ந்தது இ-க்-கார்

##5
கோடு-உயர்-தோற்ற மலை-மேல் இருங்-கொண்மூ க்
கூடி நிரந்து தலை பிணங்கி ஓடி
வளி கலந்து வந்து உறைக்கும் வானம் காண்-தோறும்
துளி கலந்து வீழ்தரும் கண்

##6
முல்லை-நறு-மலர் ஊதி இருந்-தும்பி
செல்-சார்வு-உடையார்-க்கு இனிய-ஆய் நல்லாய் மற்று-
யாரும்-இல்-நெஞ்சினேம் ஆகி உறைவேம்-ஐ
ஈரும் இருள்-மாலை வந்து

##7
தேரோன் மலை மறைந்த செக்கர் கொள் புன்-மாலை
ஊர்-ஆன்-பின் ஆயன் உவந்து ஊதும் சீர் சால்
சிறு-குழல் ஓசை செறிதொடி வேல்-கொண்டு-
எறிவது-போலும் எனக்கு

##8
பிரிந்தவர்-மேனி-போல் புல்-என்ற வள்ளி
பொருந்தினர்-மேனி-போல் பொற்ப திருந்திழாய்
வானம்-பொழியவும் வாரார்-கொல் இன்னாத-
கானம் கடந்து சென்றார்

##9
வருவர் வயங்கிழாய் வாள்-ஒண்-கண் நீர் கொண்டு
உருகி உடன்று அழிய-வேண்டா தெரிதியேல்
பைங்-கொடி-முல்லை அவிழ் அரும்பு ஈன்றன
வம்ப-மழை உரற க் கேட்டு

##10
நூல்-நவின்ற-பாக தேர் நொவ்விது-ஆ ச் சென்றீக
தேன் நவின்ற கானத்து-எழில் நோக்கி தான் நவின்ற
கற்பு-த்-தாள் வீழ்த்து கவுள்-மிசை க் கை ஊன்றி
நிற்பாள் நிலை உணர்கம் யாம்

##11
பொன்-இணர்-வேங்கை கவினிய பூம்-பொழில்-உள்
நன்-மலை-நாடன் நலம் புனைய மென்முலையாய்
போயின சில்-நாள் புனத்து மறை-இன்-ஆல்
ஏயினர்-இன்றி இனிது

##12
மால்–வரை–வெற்ப வணங்கு–குரல்–ஏனல்
காவல் இயற்கை ஒழிந்தேம் யாம் தூ–அருவி
பூ–க்–கண் கழூஉம் புறவிற்று–ஆய் பொன்–விளையும்–
பாக்கம்–இது எம்–இடம்

##13
கானக–நாடன் கலவான் என்–தோள் என்று
மான்–அமர்–கண்ணாய் மயங்கல்–நீ நானம்
கலந்து இழியும் நல்–மலை–மேல் வால்–அருவி ஆட
புலம்பு–உம் அகன்று நில்லா

##14
புனை பூந்–தழை அல்குல் பொன்–அன்னாய் சாரல்
தினை காத்து இருந்தேம்–யாம்–ஆக வினை–வாய்த்து
மா–வினவுவார்–போல வந்தவர் நம்–மாட்டு த்
தாம்–வினவல்–உற்றது–ஒன்று–உண்டு

##15
வேங்கை–நறு–மலர் வெற்பு–இடை யாம் கொய்து
மான்–தளிர்–மேனி வியர்ப்ப மற்று ஆங்கு எனைத்தும்–
பாய்ந்து–அருவி–ஆடினேம்–ஆக பணிமொழி–க்கு ச்
சேந்தன–வ்–ஆம் சேயரி–க்–கண் தாம்

##16
கொடு–வரி வேங்கை பிழைத்து கோட்பட்டு
மடி செவி வேழம் இரீஇ அடி ஓசை
அஞ்சி ஒதுங்கும் அதர் உள்ளி ஆர்–இருள்
துஞ்சா சூடர்த்தொடி கண்

##17
மஞ்சு–இவர்–சோலை வள–மலை–நல்–நாட
எஞ்சாது நீ வருதி என்று எண்ணி அஞ்சி
திரு ஒடுங்கும் மென்–சாயல் தேம்–கோதை மாதர்
உரு ஒடுங்கும் உள்–உருகி–நின்று

##18
எறிந்து எமர்–தாம்–உழுத ஈர்ங்–குரல்–ஏனல்
மறந்தும் கிளி–இனம்–உம் வாரா கறங்கு அருவி
மா–மலை–நாட மடமொழி–தன்–கேண்மை
நீ–மறவல் நெஞ்சத்து–க்–கொண்டு

##19
நெடு–மலை–நாட நீள்–வேல் துணை–ஆ
கடு–விசை வால்–அருவி நீந்தி நடு–இருள்
இன்னு அதர் வர ஈர்ங்–கோதை மாதராள்
என்–ஆவாள் என்னும் என்–னெஞ்சு

##20
வெறி-கமழ்-வெற்பன் என்–மெய்–ந–நீர்மை கொண்டது
அறியாள்–மற்று–அன்னை அணங்கு–அணங்கிற்று என்று
மறி ஈர்த்து உதிரம் தூய் வேலன் தரீஇ
வெறி–ஓடு அலம்வரும் யாய்

##21
கொண்டுழி ப் பண்டம் விலை ஒரீஇ க் கொற்சேரி
நுண்–துளை த் துன்னூசி விற்பார்–இன் ஒன்றுனும்–
வேறு–அல்லை–பாண வியல்–ஊரன் வாய்மொழி–ஐ த்
தேற எமக்கு உரைப்பாய் நீ

##22
போது–ஆர்–வண்டு ஊதும் புனல்–வயல்–ஊரன்–கு த்
தூது–ஆய் த் திரிதரும் பாண்–மகன்–ஏ நீ–தான்
அறிவு–அயர்ந்து எம்–இல்லுள் என்–செய்ய–வந்தாய்
நெறி–அது–காண் எங்கையர்–இல்–கு

##23
யாணர்--அகல்--வயல்--ஊரன் அருளுதல்
பாண பரிந்து உரைக்க--வேண்டும்--ஓ மாண
அறிவது அறியும் அறிவினர் கேண்மை
நெறி--ஏ உரையாது--ஓ மற்று

##24
கோல--ச்--சிறு--குருகு--இன் குத்து அஞ்சி ஈர்--வாளை
நீலத்து--ப்--புக்கு ஒளிக்கும் ஊரன்--கு மேல்--எல்லாம்
சார்தல்--கு ச் சந்தன--ச்--சாந்து--ஆயினேம் இ--ப்--பருவம்
காரத்தின்--வெய்ய--என்--தோள்

##25
அழல் அவிழ் தாமரை ஆய்--வயல்--ஊரன்
விழை--தகு--மார்பம் உறும் நோய் விழையின்
குழலும்--குடுமி என்--பாலகன் கூறும்
மழலை--வாய் க் கட்டுரை--ஆல்

##26
பெய்--வளை--க்--கையாய் பெரு--நகை--ஆகின்று--ஏ
செய்--வயல்--ஊரன் வதுவை விழவு இயம்ப
கை புனை தேர் ஏறி ச் செல்வான்--ஐ ச் சென்று இவன்
எய்தி இடர்--உற்ற--ஆறு

##27
தண்--வயல்--ஊரன் புலக்கும் தகையம்--ஓ
நுண்--அறல் போல நுணங்கிய ஐங்--கூந்தல்
வெண்--மரல் போல நிறம் திரிந்து வேறு--ஆய
வண்ணம்--உடையேம் மற்று யாம்

##28
ஒல்-என்று ஒலிக்கும் ஒலி புனல் ஊரன்-கு
வல்-என்றது என்-நெஞ்சம் வாள்-கண்ணாய் நில் என்னாது
ஏக்கற்று ஆங்கு என்-மகன்-தான்-நிற்ப என்னானும்-
நோக்கான் தேர் ஊர்ந்தது கண்டு

##29
ஒல்-என் ஒலி புனல் ஊரான் வியல்-மார்பம்
புல்லேன் யான் என்பேன் புனையிழையாய் புல்லேன்
எனக்கு ஓர்-குறிப்பு-உம்-உடையேன்-ஓ ஊரன்-
தனக்கு ஏவல் செய்து ஒழுகுவேன்

##30
குளிர்-உம் பருவத்து-ஏ-ஆயினும் தென்றல்
வளி எறியின் மெய்-இன்-கு இனிது-ஆம் ஒளியிழாய்
ஊடி-இருப்பினும் ஊரன் நறு-மேனி
கூடல் இனிது-ஆம் எனக்கு

##31
உதிரம்-துவரிய-வேங்கை உகிர் போல்
எதிரி முருக்கு அரும்ப ஈர்ந்-தண்-கார் நீங்க எதிரிநர்-க்கு
இன்பம் பயந்த இள-வேனில் காண்-தொறும்
துன்பம் கலந்து அழியும் நெஞ்சு

##32
விலங்கல் விளங்கிழாய் செல்வார்-ஓ-அல்லர்
அழல்-பட்டு அசைந்த பிடி-ஐ எழில்-களிறு
கல்-சுனை-ச்-சேற்றிடை ச் சின்னீர்-ஐ க் கை-ஆல்-
கொண்டு
உச்சி ஒழுக்கும் சுரம்

##33
பாவை-உம் பந்து-உம் பவள-வாய்-ப்-பைங்-கிளி-உம்
ஆயம்-உம் ஒன்றும்-இவை-னினையாள் பால் போலும்
ஆய்ந்த மொழியினுள் செல்லும்-கொல் காதலன்-பின்
காய்ந்து கதிர் தெறூஉம் காடு

##34
கோட்டு அமை வல்-வில் கொலை பிரியா வன்-கண்ணர்
ஆட்டிவிட்டு ஆறு-அலைக்கும் அத்தம்-பல நீந்தி
வேட்ட முனை-வயின் சேறிர்-ஓ ஐய நீர்
வாள்-தட-ங்-கண்-மாதர்-ஐ நீத்து

##35
கொடு-வில் எயினர்-தம்-கொல்-படை-ஆல் வீழ்த்த
தடி-னிணம் மாந்திய பேஎய் நடுகல்
விரி-னிழல் கண்படுக்கும் வெங்-கானம் என்பர்
பொருள்-புரிந்தார் போய சுரம்

##36
கடிது ஓடும் வெண்-தேரை நீர்-ஆம் என்று எண்ணி
பிடி-ஓடு ஒருங்கு-ஓடி தாள் பிணங்கி வீழும்
வெடி ஓடும் வெங்-கானம் சேர்வார்-கொல் நல்லாய்
தொடி ஓடி வீழ த் துறந்து

##37
தோழியர் சூழ த் துறை-முன்றில் ஆடும்-கால்
வீழ்பவள்-போல த் தளரும் கால் தாழாது
கல் அதர் அத்தத்தை க் காதலன்-பின் போதல்
வல்ல-வ்-ஓ மாதர் நடை

##38
சுனை வாய் ச் சிறு-நீர்-ஐ எய்தாது என்று எண்ணி
பிணை-மான் இனிது-உண்ண-வேண்டி கலைமா தன்-
கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி

##39
மடவை–காண் நல்–நெஞ்சே மாண்–பொருள்–மாட்டு ஓட
புடை–பெயர்–போழ்தத்து–உம் ஆற்றுள் படர்–கூர்ந்து
விம்மி உயிர்க்கும் விளங்கிழையாள் ஆற்றும்–ஓ
நம்மின்–பிரிந்த–இடத்து

##40
இன்று அல்கல் ஈர்ம்–படை–உள் ஈர்ங்–கோதை–தோள்–துணை–ஆ
நன்கு–வதிந்தனை நல்–நெஞ்சே நாளை நாம்
குன்று அதர் அத்தம் இறந்து தமியம்–ஆய்
என்–கொலோ சேக்கும்–இடம்

##41
தெண்–கடல்–சேர்ப்பன் பிரிய புலம்பு–அடைந்து
ஒண்–தடங்கண் துஞ்சற்க ஒள்ளிழாய் நண்பு–அடைந்த–
சேவல்–உம் தன்–அருகில் சேக்கும்–ஆல் என்–கொலோ
பூந்–தலை–அன்றில் புலம்பு

##42
கொடுந்–தாள்–அலவ குறை யாம் இரப்பேம்
ஒடுங்கா ஒலி–கடல்–சேர்ப்பன் நெடுந்–தேர்
கடந்த வழி–ஐ எம்–கண்–ஆர–க்–காண
நடந்து சிதையாதி–நீ

##43
பொரி–ப்–புற–ப்–பல்லி ச் சினை ஈன்ற புன்னை
வரி–ப்–புற வார்–மணல்–மேல் ஏறி தெரிப்பு–உற த்
தாழ்–கடல்–தண்–சேர்ப்பன் தார் அகலம் நல்குமேல்
ஆழி–ஆல் காணும்–ஓ யாம்

##44
கொண்கன் பிரிந்த குளிர்-பூம்-பொழில் நோக்கி
உண்கண் சிவப்ப அழுதேன் ஒளி-முகம்
கண்டு அன்னை எவ்வம்-யாது என்ன கடல் வந்து என்-
வண்டல் சிதைத்தது என்றேன்

##45
ஈர்ந்-தண்-பொழில்-உள் இருங்-கழி த் தண்-சேர்ப்பன்
சேர்ந்து என்-செறி-வளை-த்-தோள் பற்றி த் தெளித்தமை
மாந்தளிர்-மேனியாய் மன்ற-விடுவன-வ்-ஓ
பூந்-தண்-பொழில்-உள் குருகு

##46
ஓதம் தொகுத்த ஒலி கடல் தண்-முத்தம்
பேதை மடவார் தம்-வண்டல் விளக்கு-அயரும்
கானல்-அம்-சேர்ப்ப தகுவது-ஓ என்-தோழி-
தோள்-நலம் தோற்பித்தல் நீ

##47
பெருங்-கடல் உள்-கலங்க நுண்-வலை வீசி
ஒருங்கு-உடன் தன்-ஐமார் தந்த கொழு-மீன்-
உணங்கல் புள் ஓப்பும் ஒளி-இழை மாதர்-
அணங்கு-ஆகும் ஆற்ற எமக்கு

##48
எக்கர்-இடு-மணல்-மேல் ஓதம் தர வந்த
நித்திலம் நின்று இமைக்கும் நீள்-கழி-த்-தண்-சேர்ப்ப
மிக்க-மிகு-புகழ் தாங்குப-வ்-ஓ தன்-சேர்ந்தார்
ஒற்கம் கடைப்பிடியாதார்

##49
கொடு-முள் மடல் தாழை க் கூம்பு அவிழ்ந்த ஒண்-பூ-
இடை-உள் இழுது-ஒப்ப-த்-தோன்றி புடை-எலாம்
தெய்வம்-கமழும் தெளி-கடல்-தண்-சேர்ப்பன்
செய்தான் தெளியா-க்-குறி

##50
அணி—கடல்—தண்—சேர்ப்பன் தேர்—ப்—பரி—மா ப் பூண்ட
மணி அரவம் என்று எழுந்து போந்தேன் கனி விரும்பும்
புள் அரவம் கேட்டு ப் பெயர்ந்தேன் ஒளியிழாய்
உள்—உருகு—நெஞ்சினேன்—ஆய்